ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

सततसुलभदैन्ये निःसुखे जीवलोके यदि मम परिवादात् प्रीतिमाप्नोति कश्चित् । परिवदतु यथेष्टं मत्समक्षं तिरोवा जगति हि बहुदुःखे दुर्लभः प्रीतियोगः ॥

எப்பொழுதும் எளிதில் ஏழ்மையடைந்து சுகலேசமின்றி கஷ்டப்படும் ஜீவலோகத்தில் என்னை நிந்தித்து ஒருவன்பிரீதியையடைவானாகில் இஷ்டம்போல் என் எதிரிலேயோ என்னைக் காணாதவிடத்திலேயோ நிந்திக்கட்டும். ஏனெனில் அதிக துக்கமுள்ள ஜகத்தில் ஸுகமுண்டாவது அரிதல்லவா ?'' தனக்காகிலும், பிறருக்காகிலும் எவ்வித உபத்திரவமுண்டாகாமல் சுகமே உண்டாகும்படி செய்துகொள்ளவேண்டியதுதான் பிறவியின் பயனாகும். தன் விஷயம் எப்படிப்போனாலும் பிறர் விஷயத்தில் ஸுகத்தையுண்டாக்கப் பிரவிருத்திப்பதே அதிலும்சிறந்தது அதுவே பரமேசுவரப் பிரசாதகாரணமானதென்றும்அதனாலேயே தன்இஷ்டமெல்லாம் ஸித்திக்குமென்றும், ஸ்மிருதி புராணாதிகளில் கூறப்படுகின்றது.அப்படியிருக்கையில் சிலர் தன்காரியமே பெரிதென்று பாவித்து பிறர் ஹிதத்தைக் கெடுக்கப்பார்க்கிறார்கள். சிலர் கெடுத்துவிடுகிறார்கள். இவர்களாவது தேவலை. தனக்கேனும் பிறருக்கேனும் எவ்விதப் பிரயோஜனத்திற்குமுபயோகப்படாமல் பிறர் இஷ்டத்தைக் கெடுத்து விடுகிறார்களே. அவர்களைப்பற்றி என்ன சொல்லுவது ? ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அவர்களை இன்னாரென்று சொல்லக்கூடத் தெரியவில்லையென்று பெரியோர் கூறுகின்றனர். அந்தப் பாபிகள் தற்காலம் இருக்கக்கூடிய ஸ்திதியைக் காட்டிலும் ஹீனஸ்திதியையடைந்து நரகத்தில் விழுந்து பரிதபிப்பார்களென்று சாஸ்திரம் கூறுகின்றது. இவ்வுண்மையை அறிந்து தான் ஸாதுக்கள் தப்பு வழியில் போவதில்லை. தன் விஷயம் எப்படிப் போனாலும் பிறர் ஸந்தோஷப்படவேண்டியதையே பெரிதாக நினைத்துப் பாடுபடுவார்கள். ஒருவன் தன்னை தூஷித்து ஸந்தோஷப்படுவதானால் அதை மிகப் பிரீதியுடன் ஏற்றுக்கொள்வார்கள். ஸந்தோஷ லேசமில்லாமல் பரிதபிக்கும் பிராணிகள் நம்மை நிந்திப்பதாலேயே ஸந்தோஷப்படுவதாய் இருந்தால் அதை ஏன் நாம் தடுக்கவேண்டும். இஷ்டம்போல் நிந்தித்து ஸந்தோஷப்படட்டுமே. காசையோ பணத்தையோ செலவழித்தும் சரீரப் பிரயாஸைப்பட்டும் ஸந்தோஷப்படுத்த நம்மால் முடியாவிட்டாலும் இதற்குக்கூடவா ஸம்மதிக்க முடியாது. அப்படி இதற்குக் கூட ஸம்மதிக்க முடியவில்லையானால் வேறு எவ்விதத்தாற்றான் பிறரை ஸந்தோஷப்படுத்தப்போகிறோம். நம்மை நிந்தித்து ஸந்தோஷப்படுவதாக நினைத்தவன் நம்மிடம் வேறொன்றையும் கேழ்க்கவில்லை. அவன் தொண்டை வரண்டு போகும்படி நிந்திக்கத்தான் நினைக்கிறான். அப்படியே செய்யட்டும். ஸந்தோஷப்படட்டும் என்று தான் நாம் நினைக்கவேண்டும் என்று திடமாக உறுதி செய்துகொண்டு நேரில் வந்து தூஷிக்கத் தலைப்பட்டாலும் மனதில் எவ்விதவிகாரத்தையுமடையமாட்டார்கள். நேரில் நிந்திக்க ஸங்கோசப்படுவானாகில் காணாதவிடத்திலாவது நிந்தித்துக்கொள்ளட்டும் என்று தாராளமாய் ஸம்மதிப்பார்கள். இத்தகைய உத்தமகுணத்தை அடைந்து யாவரும் ஸுகிருதபலத்தை யடைவார்களாக. சுபம். ப-ர்.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-ஹு ஆனி-மீ ௨௯ ௨

ஜாதிபேதம்.

பிரத்யக்ஷத்தாலும் அதை முன்னிட்டு ஜீவிக்கும் அனுமானத்தாலும் தெரிந்துகொள்ளக் கூடிய விஷயம் சொல்பமே. ஏனெனில் அவை நிகழ்காலத்தில் மறைவில்லாமல் ஸமீபத்திலிருக்கும் விஷயங்களைக் காட்டுகின்றன. நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களோ மிகவும் அதிகமாயிருக்கின்றன. அவைகளைத் தெரிந்து கொள்ள இவை போதாதென்றே சப்தமென்ற ப்ரமாணம் அங்கீகரிக்கப்பட்டது. அதனால் இறந்தகாலம் வருங்காலத்திலுள்ளதும் வெகு தூரத்திலும் மறைந்திருப்பதும் இகலோகபரலோகத்திலுள்ளதும் ஆகிய பலவிஷயங்களைத் தெரிந்துகொள்கிறோம். எவ்வளவு புத்திசாலியாயிருப்பினும் இந்த சப்தப்ரமாணமில்லாவிடில் முன் யுகாந்தரங்களில் நடந்தவைகளை ஊஹத்தால் தெரிந்து கொள்ள முடியாது. அப்படியிருக்க தற்காலத்திய சிலர் முன் காலத்தில் வர்ணாச்ரம விபாகமே கிடையாதென்றும் அது புதிதாய் கற்பிக்கப்பட்டதென்றும் கண்டபடி பேசுகிறார்கள். பத்திரிகைளிலும் பிரசுரிக்கிறார்கள். எந்தப் பிரமாணத்தால் அப்படித் தெரிந்துகொண்டு பேசுகிறார்களென்பது தெரியவில்லை. சப்தப்ரமாணங்களாக வழங்கப்படும் சுருதி ஸ்மிருதி புராணம் இதிஹாஸம் முதலியவைகளில் வர்ணாச்ரமப் பிரிவினையில்லாத காலமொன்றிருந்ததாகவோ இருக்கப்போகிறதாகவோ கூறப்படவில்லை. அவைகளெல்லாம் கட்டுப் பாடாக எழுதிவைக்கப்பட்டிருக்கின்றனவென்று தற்காலத்திய மேதாவிகள் சொல்லுகிறார்கள். இப்படி எந்த சப்தப்ரமாணம் சொல்லுகிறது. எந்த புஸ்தகங்களை புரட்டினாலும் இவர்கள்சொல்லுகிறபடி காணப்படவில்லை. இவர்களும் ஒரு சப்தத்தைக் கொண்டுதான் இவ்விதம் சொல்லுகிறார்கள். அதற்குமாத்திரம் பிராமாண்யம் அங்கீகரிக்கப்படவேண்டுமாம் அனாதி குருபரம்பரையாய் வந்தஆர்யவேதத்திற்கு மாத்திரம் அது

கூடாதாம். இதென்ன விபரீதக்ஞானம். இதை மிகவும் சிலாக்யமென்று அங்கீகரிக்கிறார்கள். அது பிராமாணிகருக்கழகன்று. அத்தகைய வேதப்ரமாணத்தினின்று 'ஜாதிபேதமிருப்பதாகத் தெரிகிறது. அதை மாற்றவோ இல்லையென மறைக்கவோ முடியாது. இது யுக்திக்குமொத்ததென்பது பின்வரும் குருசிஷ்யஸம்பாஷணையால் தெரியவரும். அதாவது—

வைதிகரும் லௌகிகரும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டிருந்த சிஷ்யன் குருவைக் கேட்கிறான். ஓ ஸ்வாமி உயர்வு, தாழ்வு ஜாதிவித்யாஸம் முதலியன பிறப்பினாலேயே ஏற்படுகிறது என்று கூறப்பட்டது. அதற்கு ஏதோ யுக்திமாதிரியும் ஒன்று சொல்லப்பட்டது, அது நன்றாக மனதிற்குப் புலப்படவில்லை. யானை குதிரை ஆடுமாடு காக்கை கோழி முதலிய பிராணிகளிடத்தில் அங்காவயவாதி பேதங்கள் ப்ரத்யக்ஷமாகக்காணப்படுவதால் ஆங்கு ஜாதிபேதம் காணப்படுகின்றது. அதுபோல் மனிதர்களிடத்தில் ஜாதிபேதம் கற்பிப்பதற்கு அங்காவயவாதி பேதங்களில் யாதொன்றையும் காணோமே, கால் கை முதலியவை சிறிது ஊனமாயிருப்பினும் அவர்களும் மனிதரென்றே வழங்கப்படுகிறார்களேயன்றி மனுஷ்யஜாதியை விட்டு வேறு மிருகஜாதியாகவழங்கபடுவதில்லை. ஆகவே மிருகஜாதியைக் காட்டிலும் வேறுபடுத்தி தெரிந்துக்கொள்வதற்காக வேண்டுமானால் மனுஷ்யஜாதியென்று ஒன்று ஒப்புக் கொள்ளலாமேயன்றி அதில் அவாந்தர பேதங்கள் கற்பிப்பதற்கு யுக்தி சரியாகவில்லை. அப்படியிருக்க மனிதரிடத்தில் ஜாதிபேதமிருப்பது போலவும், அதில் உயர்வு தாழ்வு உள்ளது போலவும் வேணுமென்றே கற்பிக்கப்பட்டதாகத்தோன்றுகிறது.

குரு:— குழந்தாய்! ஜாதியென்றும் ஒரு பதார்த்தம் அங்கீகரிக்கப்படுகின்றதா?

சிஷ்யன்:— ஆம் இது தர்க்காதி சாஸ்திரங்களில் பிரஸித்தமே. அத்வைத வேதாந்திகள் ஜாதியை நித்யம் என்று ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஆக்ருதியென்றுபெயரிட்டு ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

குரு:— அதில் வியாபகமான ஜாதிக்குள் வியாப்யஜாதி விபாகம் அங்கீகரிக்கப்படுகின்றதா? அதாவது மிருகத்தன்மை வியா

பகஜாதி. அதற்குள் ஆடு மாடு முதலியவைகளிலுள்ள அஜத்தன்மை கோத்தன்மை முதலிய வியாப்யஜாதி அங்கீகரிக்கப்படுகின்றதா ?

சிஷ்யன்:— அவைகளையும் அங்கீகரித்திருக்கிறார்கள். ஆங்காங்கு உருவம் வேறுபட்டுக் காண்பதுபற்றி அவாந்தா ஜாதிபேதம் இருக்கலாமல்லவா.

குரு:— இவைகளைத்தெரிந்து கொண்டதுபோல ஸர்பஜாதியைக் கேட்டிருக்கிறாயா ?

சிஷ்யன்:— கேட்டிருக்கிறேன். ஆனால் விரிவாகத் தெரியாது.

குரு:— சொல்லுகிறேன் கேள். திவ்யம் என்றும், பௌமம் என்றும் பாம்பு இருவகைப்படும். அவற்றுள் பௌமமென்பது பூமியிலுள்ளது. அது தர்வீகாமென்றும், மண்டலி என்றும், ராஜீமானென்றும் மூவகைப்படும், இதுகளுக்கு அங்காவயவங்கள் வேறுபட்டிருப்பதாகவும் அதனால் வெவ்வேறு ஜாதியுடையதாகவும் கூறப்படும். இவற்றுள் பிராமண ஜாதி ஸர்ப்பம், க்ஷத்திரிய ஜாதிஸர்ப்பம், வைசிய ஜாதி ஸர்ப்பம், சூத்திரஜாதிஸர்ப்பம் என்று நான்கு ஜாதிகள் கூறப்படுகின்றன. அவைகளின் விஷசக்திகளும் கடிக்கிறபிரகாரம், தேசம் முதலியதும், சிகித்ஸையும் பலவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த நான்கு ஜாதி ஸர்ப்பங்களுக்கும் அங்காவய பேதமின்றியே பிறப்பினாலேயே ஜாதிபேதமிருப்பதாக அஷ்டாங்க ஸங்கிரஹம் உத்தரஸ்தானம், 41-வது அத்தியாயத்தில் "ब्राह्मणाः क्रोधनाः" என்றது முதல் विषाधिक्यं यथोत्तर என்றது வரை 11-சுலோகங்களால் தெரிகின்றது. இதுபோல் மனுஷ்ய ஜாதியிலும் அங்காவயவபேதம்புலப்படாவிடினும் அவாந்தர ஜாதி பேதம் ஸித்தித்திருப்பதை விலக்க முடியாது. அதன்படி அந்தந்த ஜாதியார்களும் அன்யோன்ய ஸ்நேஹத்துடன் பரஸ்பரம் உபகாரம் செய்துகொண்டு க்ஷேமத்தையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

மேனாட்டுக் கல்வியின் பூர்ண நிலை.

இதைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டியதுண்டு. மேனாட்டு வித்யாப்யாஸ முறை விருத்தியாக விருத்தியாகக் கஷ்டமும் தரித்திரமும் இத்தேசத்தைப் பாதித்துக் கொண்டுவருகின்றது. நமது புராதன வித்யாப்பாசானுஷ்டானக் கிரமத்தை ஒருவரும் ஆதரிப்பதில்லை. இப்பொழுது இவ்வுலகம் முழுதும் மேனாட்டு நாகரீகத்தில் மூழ்கி இருக்கிறது. இது இருக்கும்வரையில் நமக்குத் தீங்கு தான். மேனாட்டிற்குச் சென்று ஜாதி, குலம் மதம் இவை எல்லாவற்றையும் மறந்து உயர்தர பரீக்ஷையில் தேறி, இந்நாட்டிற்குத் திரும்பி வந்தவர்களிடம் பணம் அடைய வேண்டுமென்ற ஓரே எண்ணந்தான் விளங்கிவருகின்றது. ஜன்ம ஸாபல்யமடைந்து எப்போதும் சுகமாய் வாழவேண்டும் என்ற எண்ணம் எள்ளளவும் இல்லை. தற்காலத்தில் உயர்ந்த கல்வி முறை இவ்விதம் போக்கியிருக்கிறது. இதை இனியும் வளரும்படி செய்தோமானால் கஷ்டநிலைமைதான் வருமென்பதில் ஸந்தேஹமில்லை. ஹிந்துக்களின் கல்வி முறையை முன்னுக்குக்கொண்டுவர வேண்டும். அதுதான் பெரும் பிரயோஜனத்தை யளிக்கும். துர்க்குணத்தை நாம் வித்யையால் தான் விலக்கிக் கொள்ள வேண்டும். வித்யாப்யாஸத்தால் ஹிருதயப்ரகாசப்படுத்துவது தான் உண்மை வித்யையாகுமேயன்றி கோழிப்படத்தையும், நாய்ப் பாடத்தையும் புஸ்தகத்தில் காட்டிப் படிப்பது கல்வியல்ல. வெளியில் எங்கும் கிடைக்கின்ற வஸ்துக்களை விளக்குவதற்குப் பாடமும் வேண்டுமா? சிறுவர்கள் அறிந்துகொள்ள வேண்டிய அறிய நல்ல கல்வியை பாடங்களாக வைக்கவேண்டும். அப்படிப் பட்ட பாடசாலைகள் விருத்தியாக வேண்டும்.

உள்ளறிவைப் பிரகாசம் செய்யாத வெளிச் சீர்த்திருத்தம் பிரயோஜனமில்லை. காலவித்யாஸத்தால் இவ்விதக் கல்வி முறையில் மோகமேற்பட்டு நாம் மிருகக் குணத்தை விருத்திசெய்து கொண்டுவிட்டோம். இதைப் பற்றிய ஆராய்ச்சியும் பயனற்றதாகக் கருதப்படுகின்றது. இதனால் மத தத்வங்களெல்லாம் அடியோடு மறைந்து விட்டன. நமது நாட்டில் இப்போது வழங்கி வருகின்ற ஆசாரமெல்லாம் அனாசாரமே. மதத்தின் சிறந்தவுண்மை எல்லாம் எங்கிருக்கின்றதென்று தேடவேண்டியதாயிருக்கிறது. வியாதி, சண்டை, கஷ்டம், மனோவிசாரம், மரணம் இவை

அளவிற்கடங்கவில்லே. உண்மையான மதப்ரசாரம் குன்றியதால் தான் இவை விருத்தியடைந்தன, இதன்றி கிருஸ்துமதம் புத்த மதம் மகம்மதியமதம் முதலியயாவும் அவற்றின் புராதன ஸம்ப்ர தாயப்படி நடை பெறுகின்றவா ? இல்லே, எல்லா மதமும் மாறி யனவே ! கீழ்நாட்டுக் கல்வி முறைக்கும் மேனாட்டுக் கல்விமுறை க்கும் வித்யாஸத்தைக் கவனித்தால் யானைக்கும் ஆட்டுக்குட்டிக் கும் உள்ள வேற்றுமைபோல் வெகு தூரம் அகன்று நிற்கும். இவ்வேற்றுமையை இப்போது இவ்வுலகம் கொஞ்சமறிந்துகொ ண்டு வருகின்றது. ஒருக் கால் உலகமெல்லாம் நமது புராதன வித்யாப்பாஸ முறையைப் பின் பற்றுங்காலம் உண்டாகக் கூடும், இதைப்பற்றி இந்த ஒருவியாஸம் மட்டிலும் போதவே போதாது. முயற்சியும் ஆராய்சியும் நமக்கு அவசியம்வேண்டும், அப்போது தான் நாம் க்ஷேமமடையலாம். ஆதலால் நம் நாட்டுக் கல்வி முறையையே பின்பற்ற முயற்சிப்போமாக. சுபம் !

வி ஜகதீசுவரசாஸ்திரிகள்

ஆஸ்திகனுக்கும் அத்வைதிக்கும் ஸம்வாதம்

ஆஸ்திகன் வினு ? ஹே ஸ்வாமிந் எங்கே வெகு வேகமாய் செல்கிறீர்கள். தங்களுடைய தரிசனமே கிடைப்பது துர்லபமா யிற்றே, இவ்விடம் கொஞ்சம் தாமஸிக்க கூடாதா ?

அத்வைதி, விடை — அய்யர்வாளா! கொஞ்சம் அவஸரகாரியத்தால் நான் கவனிக்கவில்லே. மன்னிக்கவும். தங்களேப் போன்ற ஒரு ஆஸ்திகப்ரபுக்களின் தரிசனம் இகபரசுகமிரண்டும் தரும். எங்க ளுடைய தரிசனம் தங்களேப் போன்ற பிரபுக்களுக்கு எதைக் கொடுக்கும்.

ஆ. வினு, வாஸ்தவந்தான். எங்களேப்போன்ற பிரபுக்களின் தரி சனம் தான் இகபர சுகம் இரண்டுமட்டும் தான் கிடைக்கும். தங்களேப்போன்ற பண்டிதசிகாமணிகளின் தரிசனத்தால் மோ க்ஷபரியந்தமான பிரயோஜனம்கிடைக்கும். பிரபுக்களுக்கும் வித்வான்களுக்கும் பரஸ்பராபேக்ஷை இல்லாவிடில் என்ன நடக்கும் ? இது இருக்கட்டும். அவசர கார்யம் என்றீர்களே? என்ன அவஸரம் ?

அ. விடை. ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஸ்ரீமதாசாரியாளின் ஸ்ரீ மடத்தில் வருஷத்துக்கு ஒரு முறை அத்வைதிகளின்ஸமாஜமொன்று நடைபெற்று வருவது தங்களுக்கும் தெறிந்திருக்கலாம். அதற்குச் செல்வதுதான் அவஸரமென்றேன்,

ஆ. வின:— ஆமாம் ஷை ஸமாஜத்தின் நோட்டீஸ் மூலமாக எனக்குத் தெரியும்...... ஆனால் அவ்விடத்தில் என்ன நடக்கும் ?

அ. விடை:— வேதாந்த வாக்கிய விசாரம் நடைபெறும்.

ஆ. வின:— வேதாந்த வாக்யவிசாரம் என்றால் என்ன ?

அ. விடை:— ஸத்குருவின் அனுக்ரஹமூலமாக வேதாந்தவாக்யங்களின் தத்வார்த்தத்தை நிர்ணயித்துக் கொள்ளவேதான் வேதாந்த விசாரமென்பது.

ஆ. வின:— அவ்வித விசாரத்தால் நமடையும் பயனென்ன ?

அ. விடை;— அத்வைதாத்மலாபம்தான் பரம பிரயோஜனமாகும்

ஆ. வின;— அத்வைதமென்றால் என்ன ?

அ. விடை;— நானென்ற அஹங்காரம் முற்றிலுமடங்கிய சின்மாத்திர நிலையில் இரண்டற நிற்றலே அத்வைதமாம்.

ஆ. வின:— இரண்டற நிற்றல் என்பது என்ன ?

அ. விடை:— எவன் நிரந்தர விசாரத்தால் ஆத்மஸ்வரூபத்தையடைய முயல்வானோ அவனுக்கு அன்னியமாக வேறொருவஸ்துவும் இல்லாமையால் எப்போதும் தன் சுபாவ நிலையினின்றும் மாறாதிருப்பதே இரண்டற நிற்றலென்பது.

ஆ. வின:— ஆத்மாவுக்கு வேறாக திருசிய ப்ரபஞ்சங்கள் விளங்கிக் கொண்டிருப்பதால் முன் கூறிய தன்னிலை எங்ஙனம் பொருந்தும்.

அ. விடை;— மண்ணும், நூலும் காரணமாகவும் காரியமாகவும் இருப்பதன்றி வேறில்லை என்பதுபோல் சின்மாத்திரமான தன்னையன்றி திருச்ய பிரபஞ்சம் வேறில்லையாதலால் அவ்வாத்மாவே திருச்யப்ரபஞ்சவடிவமாக ஸித்தித்துவிட்டதல்லவா. ஆகவே திருச்யமெல்லாம் ஆத்மாவினிடத்தில் கற்பிதத் தோற்ற மாத்திரமேயன்றி பாரமாத்திகமன்று.

ஆ. வின:— இங்ஙனம் கூறுவது சுருதி சம்மதமாகுமாவெனின்

அ. விடை:— வேதமுடிவாயுள்ள மஹாவாக்யங்களே இவ்விஷயத்திற்கு பிரமாணங்களாகும்.

ஆ. வின:— த்வைதி விசிஷ்டாத்வைதிகளும் இம் மஹாவாக்யங்களுக்கு பேத விசிஷ்டாபேத பரமாக பாஷ்யம் செய்திருக்கின்றார்களே ? அவர்கள் வாக்ய யோசனையன்றி செய்வார்களா? அப்படிச் செய்வார்களாயின் அவர்களை ஸர்வக்ஞர்களாக எப்படி ஒப்பமுடியும், ஆகவே மஹாவாக்யங்களுக்குசுத்தாத்வைதத்தைப் பொருளாக எங்ஙனம் கொள்வது ?

ஆ. விடை:— த்வைத விசிஷ்டாத்வைத பாஷ்யகாரர்கள் ஸர்வக்ஞர் என்பதில் ஆக்ஷேபமில்லை. அதனால்தான் அவர்களுடைய அர்த்தத்தை அதிகாரிகளின் நிலைமையை அனுஸரித்து அங்கிகரித்துக் கொண்டே அத்வைதிகள் அதற்கு மேற்படியாக சுத்தாத்வைதத்தையும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். த்வைதி விசிஷ்டாத்வைதிகளோவெனில் சுத்தாத்வைதத்தை ஒப்பாமலே தமது ஸித்தாந்தத்தை நிலைநாட்டுகிறார்கள். இந்தவிடத்தில் தான் த்வைதி விசிஷ்டாத்வைதிகளுக்கும் அத்வைதிகளுக்கும் விவாதம் உண்டாகிறது. அப்படி அவர்கள் அத்வைதத்தை அங்கீகரியாதிருப்பதற்குக் காரணமென்ன? சுத்தாத்வைதானுபவம் இவ்வுலகில் ஒருவருக்குமில்லை என்பது நியாயமில்லை. சுஷுப்தி மூர்ச்சை ஸமாதி முதலிய அவஸ்தைகளில் திரிபுடிகளின்றி சுத்தாத்வைதம் அப்ரகாசம் விளங்கவில்லையா ?

ஆ. வின.— ப்ரத்யக்ஷப்ரமாணங்களால்ஜீவஜகதீசுவரபேதம் அனுபவிக்கப்படும் போது எங்ஙனம் அவைகளுக்கு ஏகத்வம் ஸாதித்தல் கூடும் ?

ஆ. விடை:— இது ஸரியல்ல. ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களைக் காட்டிலும் சப்தவடிவமாயுள்ள வேதங்களுக்குப் ப்ராமாண்யமதிகமானதால் அவை ப்ரத்யக்ஷாதிகளால் ப்ராப்தமாயுள்ள ஜீவஜகதீசுவர பேதத்தைக்கண்டித்து அபேதத்தை பரமார்த்தமாக போதிக்கின்றன. ஆகவே பேதம் என்பது அக்ஞானம் முதலிய உபாதி பேதத்தாலன்றி பாரமார்த்திகமாயில்லை. இதனால் ஜீவப்ரும்ம ஐக்கியம் ஸாதிக்கக் கூடுமென்றறிக.

ஆ. வின.— அக்ஞானம் என்ற அனிர்வசனீய வஸ்துவை ஒப்புவதற்கு ப்ரமாணமில்லையே இப்படி அபூர்வமாக வஸ்துக்களைக் கல்பித்துக் கூறுவது உசிதமோ ?

அ, விடை:— அனிர்வசனீயமான அக்ஞானசக்தியை அங்கீகரிப்பதற்கு அனந்த ப்ரமாணமுண்டு. அது நிற்க. அறியாமை என்பது யாவருக்கும் அனுபவ விஷயமே. அதுதான் அக்ஞானமென்றொப்புவதில் என்ன தடை. ஞானம் அக்ஞானம் என்ற இருவஸ்துக்களை யாவரும் ஒப்பவேண்டும். இவற்றில் ஞானம் என்பது அறிவு. அறியாமை பிராந்திஞானமாகும். ஆகையால் ஆத்மவஸ்துவிற்கு அன்யதிருச்யவஸ்து எல்லாம் இவ்வறியாமையாலேயே ஏற்பட்டது எனத்தெளிக.

ஆ' வினு:— அறியாமையை அறிவின் இல்லாமையாகிய அபாவ வடிவமாக ஏற்கக் கூடாதோ.

அ. விடை:— கூடாது. அக்ஞானத்திற்கு லக்ஷணம் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. அது அபாவவடிவமாயின் அபாவத்திற்கு லக்ஷணம் ஏது ?

ஆ. வினு,— இவ்வக்ஞானம் வாஸ்தவமா மித்யையா ?

அ, விடை:— அக்ஞானமும் கற்பிதமேயன்றி யதார்த்தமன்று.

ஆ. வினு:— திருச்யப்ரபஞ்சமெல்லாம் அனுதிநித்யமாயிருக்கஅக்ஞானம் கற்பிதமெனலாமா ?

அ. விடை:— வஸ்து விசாரணையில் இப்பிரபஞ்சமெல்லாம் அறிவு மாத்திரமாய் முடிதலால் வாஸ்தவமில்லை என்னலாம்,

ஆ. வினு:— அது எப்படி ?

அ. விடை:— பிருதிவ்யாதிதத்வங்களை விசாரிக்குமிடத்து அதன் காரணமாக முதல்போல் காரியங்களை எல்லாம் தம் தம் காரணங்களிலொடுக்கிக்கொண்டுபோனுல்முடிவில்திருச்யமெல்லாம் சித்ரூபாத்மாவாய் முடிந்து விடுவதால் பிரபஞ்சம் அசத்தே.

ஆ, வினு:— இவ்வாறு காரியகாரணுபேதத்தை ஒப்புக்கொண்டு அத்வைதம் கூறுவானேன். அதது இருந்தபடி இருக்க பேதமே சாதிக்கலாகாதோ ?

அ. விடை:— அங்ஙனமாயின் விசாரமற்ற பாமர நிலைமையே சிறப்புற்றதாகும். அது இல்லையே.

ஆ. வினு:— விசாரமென்பது எப்படி செய்யத் தகும்.

அ. விடை:— நானுர் என்போன்ற ஜீவர்கள் யார் ஜடத்திற்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம் என அடிக்கடி அனுஸந்தானம் பண்ணுவது தான்.

ஆ. வினா:— இதனால் என்ன பயன்.

அ. விடை:— எங்குந்தானாகவே விளங்குவது, ஸர்வதுக்க நிவ்ருத்தி முதலியன.

ஆ. வினா:— உள்ளும்புறமும் தோன்றும் தேகவிதிபேதங்களை எப்படி சின்மாத்திரமாக்குவது.

அ. விடை:— சைதன்யத்தையன்றி வேறொன்றுமில்லை என்று பாவித்துக்கொண்டு தம்முன் தோன்றிய விஷயங்களையும் சைதன்யமாகவே தரிசித்து வந்தால் த்ருச்யப்ரபஞ்சமெல்லாம் அப்பிலுப்புபோல் கரைந்து சின்மாத்ரமாக இரண்டற விளங்கும். இதுதான் வேதாந்த ரஹஸ்யம். இந்த ரஹஸியங்களை எல்லாம் தான் இவ்வித அத்வைத ஸபையில் வித்வான்கள் ஜனங்களெல்லாம் அறிந்துய்யுமாறு விசாரித்து வருகிறார்கள். ஆகையால் தாங்கள் வீணில் குதர்க்கம் செய்து காலங்கழிக்க வேண்டாம். அந்த சபைக்கே நாமும் சென்று சிரத்தாபக்தியுடன் அத்வைத விசாரம் செய்து பேறின்பவீடு பெறுவோம்.

(இன்னும்வரும்)

வி ஜகதீசுவரசாஸ்திரிகள்

உபாகர்ம விசாரம்.

"நாளது ஹஸ் உபாகர்மாவை எப்பொழுது செய்கிறது?" என்கிற விஷயமாய் ஸ்ரீமான் ஆஸ்திக மணி வெ லக்ஷ்மண சாஸ்திரிகள்வெகுநாளாய் நமதுபத்திரிகையில் விசாரித்துவருவது யாவரும்அறிந்த விஷயம். அவர்களுடைய கோரிக்கையன்றி மற்றோர்களுமே தெரிந்துகொள்ள ஆவச்யகமுமிருக்கிறது. இது விஷயமான தகரார் பெரும்பாலாக எவ்வருஷத்திலுமுதிக்கிறது. சில வருஷங்களே விவாதமில்லாதவைகள். சந்தேகமுண்டாவதற்கும் அதற்கு பரிகாரத்தையும், தீர்க்கதர்சிகளான மகர்ஷிகள் தீர்மானமாய் எழுதிவைத்திருக்கிறார்கள். அதன்படி ஒருமனதாய் எல்லோரும் தந்தம் ஸம்பிரதாயப்படி செய்துகொள்ளவும் வரைந்துள்ளார். நமது பிராசீன பண்டித ரத்னங்களாலும் அது கையாண்டு இன்றைக்கும் வழங்கிவருகிறது. வஸ்து ஸ்திதி

இவ்விதமிருக்க, பஞ்சாங்கம் கணிப்போர் என்ற காரணத்தாலே அவர்ஓர்காலத்தை குறிப்பிட்டிருந்தால் அதையே பின்பற்றி வீண் ஆக்ஷேபங்களில் தன் புத்தியைச் செலவிடுவது சிலருக்கே உத்ஸாஹமளிக்கும். அவைகளை விட்டு ப்ரஸ்தாப விஷயத்தில் யஜுர் உபாகர்மாவுக்கு முக்யகாலத்திற்கு தோஷமேற்பட்டால் அதற்கடுத்தக் கூறியுள்ள கௌணகாலத்தில் ப்ரதம, த்விதீயம், என்று பேதமில்லாமல் உபாகர்மாவைச் செய்வது சாஸ்திரசம்மதமென்று பலநாளாக அனுஷ்டிக்கப்பட்டுவருகிற விஷயம். ருதிரோத்காரி வருஷ என் பிரியநண்பர் பிர்ம்மஸ்ரீ M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகளால் நமது பத்திரிகையில் விரிவாய் வியாஸம் எழுதப்பட்டும் அதன் தாத்பர்யமே பின்னிட்ட விவாத காலங்களிலும் பயன் பெற்று வருகிறது. ஏராளமாக வசநங்கள் நியாயவிசாரம் செய்யப்பெற்று வெளிவந்திருப்பதால் நான் ஒருவசனமுமெழுதவில்லை, முடிவாக, ஆபஸ்தம்பசூத்திரிகள், அடுத்த கௌணகாலமான ப்ரோஷ்டபதியிலும், போதாயன சூத்திரிகள், அவர்களுக்கு சொன்னஅடுத்த கௌணகாலமான ஆஷாடியிலும் ஆச்வலாயனம் முதலானவர்கள் தோஷமற்ற தந்தம் கௌண காலத்திலும் செய்வது, நமது ஆசாரமும் சாஸ்திரசம்மதமாகும்.

இவ்வருஷத்தில் நடக்கும் கும்பகோணம் அத்வைத சபையிலும் பண்டிதர்களால் தீர்மானிக்கும் காலத்தில் செய்வதும் எல்லோராலும் எதிர்பார்க்கக்கூடியதே.

வைதிக ஸர்வபௌமரென்பவரால் தமது கிரந்தத்தில் என்ன தோஷமிருந்தாலும் முக்யகாலமான சிராவணியிலேயே தான் செய்யவேண்டுமென்று கூறியிருப்பதைப் பின்பற்றி சிராவணியிலேயே செய்துவரும் ஓர் சார்பாருடைய ஆசாரமும் அவர்கள் ஸம்பிரதாயத்தின்படி அனுஷ்டானம் இருந்து வருகிறது.

கும்பகோணம் ஸ்ரீமடத்துப் பஞ்சாங்கப்படி ஆவணி-மீ 1உயில் அநுஷ்டிக்கிறதா? என்கிற கேள்விக்கு அந்த பஞ்சாங்கத்தை அநுஸரிப்பவர்களுக்கு சந்தேக முதிக்குமாகில் அதன் ப்ரசுரகர்த்தாவை விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். தவறிப் பிரசுரித்திருந்தாலும் தெரிவிக்கலாம். ஆவணி-மீ 30உ சந்திர கிரஹணம் அர்த்தராத்திரிக்கு பிறகு ஏற்படுவதால் தோஷமில்லை.

மேற்கண்டபடி ஆலோசிக்குமளவில் ஆபஸ்தம்ப ப்ரதம த்விதீயாதி உபாகர்மாக்கள் ஆவணிமீ 30உயிலும், போதாயனிகள்

ஆடிமீ 2வயிலும் அனுஷ்டிப்பது சாஸ்திரத்தினுடையவும், பெரியோர்களுடையவும் சம்மதமாகுமென்றெண்ணி தெரிவிப்பதுடன் இதில் ஆக்ஷேபமிருந்தால் அதையும் நியாய முறையில் ஏற்றுக் கொள்ளவும் சித்தமாயிருப்பதையும் வணக்கமாய் தெரிவித்துக் கொண்டேன். சுபம்.

உமாமகேச்வர சாஸ்திரிகள்.

தஞ்சைஜில்லா 4-வது பிராம்மண மஹாநாடு.

திருவிடைமருதூர்.

நாளது 1932ஹு ஜுன்மாசம் 18, 19 வ களில் திருவிடைமருதூரில் தஞ்சைஜில்லாவில் 4-வது பிராம்மண மஹாநாடு நடைபெற்றது. மகா-ா-ஸ்ரீ தஞ்சாவூர் அட்வகேட் டி. கோதண்டராமய்யங்கார் அவர்கள் எம். எல். அக்கிராஸனம் வஹித்தார். ப்ரொபஸர் கெ. சுந்தரராமய்யர், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜு கே. எஸ். இராமசாமி சாஸ்திரியார் சென்னை அட்வகேட் மகா-ா-ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களும் மற்றும் பல கனவான்களும் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்திருந்தனர். 18வ யன்று காலை மணிக்கு ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி ஆலயத்திலிருந்து வேதகோஷத்தினிடையே ஊர்வலமாக வந்து அரண்மனை கட்டிடத்தின் எதிரே தயாரிக்கப்பட்டிருந்த கொட்டகையில் மஹாநாடு ஆரம்பமாகியது. உபசாரணைக் கமிட்டித் தலைவர் மகா-ா-ஸ்ரீ சி. சாம்பசிவய்யர்பேசியபிறகு பலத்த கரகோஷத்தினிடையே சபை அக்ராசனர் எழுந்திருந்து தற்போது தேசம் இருக்கும் ஸ்திதியையும் வர்ணாசிரம தர்மம் சிரழிந்து வருவதையும் சாரதாசட்டம் போலுள்ள அனேக சங்கடங்கள் பிராமணனின் சனாதனதர்மத்திற்கு எதிரிடையாய் இயற்றப்பட முயற்சி தேசத்தின் பல பாகங்களில் இருந்து வருவதைப்பற்றியும் விவாஹத்தில் மாட்டை விலைக்கு வாங்குவதுபோல் வரசுல்கம் வாங்குவதைக் கண்டித்தும் இனி பிராமணர்கள் தம் தர்மத்தைக்கைக்கொள்ள ஏகோபித்து வேலைசெய்யவேணுமென்றும் கேட்டுக்கொண்டு பேசினர். பிறகு விஷயாலோசனைக் கமிட்டியார் கூடி மறுநாள் மகாநாட்டில் கொண்டுவர வேண்டிய தீர்மானங்களைக் குறித்தனர்.

மறுநாள் 19௳ யன்று காலை மீண்டும் கூடி இனி ஏற்படப்போகும் அரசாங்க ஆக்ஷி முறையில் மதவிஷயங்களில் அரசாங்கம் தலையிடக் கூடாதென்று ஒரு சட்ட பிரிவு ஆக்ஷி முறைமையில் சேர்க்க வேண்டுமென்றும். 2. மைசூர் கவர்மெண்டில் சாரதாசட்டம் போன்ற ஓர் சட்டத்தை இயற்றவேண்டுமென்று மைசூர் அஸெம்பிளி சபையில் கூடிய பெரும்பாலர்களால் சிபார்சு செய்யப்பட்டிருந்தும் மேன்மை தங்கிய மஹாராஜா அவர்கள் இயற்றவேண்டிய அவசியமில்லை என்று ஷை சிபார்சை தள்ளிவிட்டதைக் குறித்து மே. த. மஹாராஜா அவர்களுக்கு வந்தனம் செலுத்துவதாகவும், 3. சாரதாசட்டத்தை கண்டித்ததும், அஸெம்பிளிசபையில் பைசலாகாமலிருக்கும் சாரதாசட்டத் திருத்த மசோதாவையும் ரத்து மசோதாவையும் இம்மகாநாடு ஆதரிப்பதாகவும், 5. அஸெம்பிளி சபையிலும் மற்றும் பேபர் ப்ரசங்கம் வாயிலாகவும், நம்மதவிஷயங்களை தீவிரமாய் எடுத்துப்பேசிவரும் ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியார் மகா-ா-ஸ்ரீ எம் கே. ஆசார்யர் இவர்களுக்கு வந்தனம் செலுத்துவதாயும், 6. குருவாயூர் முதலிய க்ஷேத்திரங்களில் பஞ்சமர்கள் போகவேண்டுமென்று சத்யாக்ரஹம் செய்ததைக் கண்டித்தும் அதற்கு காங்கிரஸ் உதவியாக இருக்கக் கூடாதென்றும், 7. ஸ்திரீகள் மஹாநாடு என்று கேவலம் சொல்வது மேனாட்டு நாகரீகத்தை டாம்பீகத்துக்கு அனுசரித்த ஸ்திரீகளின் சிறு கூட்டமென்றும் அவர்களால் அனுப்பப்படும் தீர்மானங்களை சர்க்கார் இந்தியஸ்திரீகள் அபிப்பிராயமென்று கொள்ளக் கூடாதென்றும், 8. வாசுல்கம் வாங்குவதைக் கண்டித்தும், 9. சாஸ்திரத்திற்கு விரோதமில்லாமல் வதுவின் வீட்டில் ஒரு நாள் சிலவும் மற்ற மூன்றுநாள் செலவும் வரன் வீடாரும் செய்து செய்யவேண்டிய கர்மாக்களை கிரமப்படி செய்யவேண்டியதென்றும், 10. கோவிலில் குருக்களையும் அர்ச்சகர்களையும் நன்றாகப்படிக்கத்தகுந்தசிறுபள்ளிக்கூடங்கள்தேவஸ்தானத்திலேயே ஸ்தாபிக்கவேண்டுமென்றும் The Servante of Dharma Socei-ety) தர்மசேவாதளம் என்ற ஓர் கூட்டத்தை ஏற்படுத்தவும் தீர்மானங்கள் நிறைவேறின. பிறகு வந்தனோபசாரங்கள் சொல்ல சபை இனி முடிந்தது. 18௳ மகா-ா-ஸ்ரீ கெ. எஸ். இராமசாமி சாஸ்திரியாரும் 19௳ மற்றும் பல பண்டிதர்களும் உபன்யசித்தார்கள்.

ஆர் வேங்கட்ராவ்.

மனுஸ்மிருதி அத்தியாயம் 2
சில வசனங்கள்.

1. உபநயநமானபிறகு ஸமிதாதானம் முதலான விருதங்கள், மந்திர பிராமண கிரமமாய் விதிப்படி அத்யயனம் இவைகளை சிஷ்யன் செய்யவேண்டும்.

2. மேற்சொல்லிய விரதங்களை அனுஷ்டிக்கும்பொழுது உபநயன காலத்தில் ஏற்பட்ட மான்தோல், யஞ்ஞோபவீதம், முஞ்சிக் கயிறு, தண்டம், இடுப்புவஸ்திரம், இவைகள் தரிக்கப்படவேண்டும்

3. குரு ஸமீபமிருக்கும் பிரம்மசாரி தன் தபோபலவ்ருத்திக்காக கண், காது, முதலிய இந்திரியங்களை அடக்கிக்கொண்டு தனக்கு ஏற்பட்ட விதி நியமங்களை அனுஷ்டிக்கவேண்டும்.

4. ஒவ்வொரு நாளும் ஸ்நாநம் செய்து சுத்தமாயிருந்து தேவ ரிஷி, பித்ருதர்ப்பணங்களை முடித்து தேவதைகளை ஆராதித்து ஸமிதாதானமும் செய்யவேண்டும்.

5. தேன், மாம்ஸம், வாஸனைத்திரவியங்கள், புஷ்பமாலைகள், ரஸங்கள், ஸ்த்ரீ, புளித்த பதார்த்தங்கள், பிராணிஹிம்ஸை இவைகளைத்தள்ளவேண்டும்.

6. வாஸனைத்தைலம், கண்ணுக்கு மை, ஜோடு, குடை, காமம், குரோதம், லோபம், நர்த்தனம், வீணை முதலியவாத்யம் இவைகளையும் தள்ளவேண்டும்.

7. சூதாடல், ஜனங்களோடு வீண் கலகம், பரதூஷணம், பொய், ஸ்திரீ ஸம்யோகம், பிறர்களுக்கு உபத்ரவம் இவைகளையும் தள்ளவேண்டும்.

8. பிரம்மசாரி எப்பொழுதும் தனித்துப் படுக்கவேண்டும். ஸ்திரீ நினைப்பே இருக்கக்கூடாது. அந்நினைப்பு பிரம்மசரிய நியமத்தை அடியோடு துலைத்துவிடும்.

9. தூக்கத்தில் ரேதஸ்கலநம் ஏற்பட்டால், த்விஜன் ஸ்நாநம் செய்து, ஸூர்யபூஜை செய்து, இழந்த வீர்யம் திரும்ப தனக்குக் கிடைக்கவேண்டுமென்ற வேத மந்திரத்தை மூன்று தடவை ஜபிக்கவேண்டும்.

10. பிரம்மசாரி ஒருகுடம் தீர்த்தம், புஷ்பம், கோமயம், மண், தர்ப்பம், குருவுக்குவேண்டிய அளவு ஸமர்ப்பிக்கவேண்டியது. ஒவ்வொருநாளும் பிக்ஷையும்எடுக்க வேண்டியது.

விக்ஞாபனம்.

த்விதீயாதிஉபாகர்மாவுக்கு ஸ்மிருதிமுக்தாபலத்தில் ஒருவித மானதோஷமும் சொல்லவில்லையாகையால் ஒருவிதமான தோஷத்தையும் எதிர்பார்க்காமல் த்விதீயாதி உபாகர்மாவை சிராவண பூர்ணிமையிலேயே செய்யவேண்டும். பலபேர்கள், தோஷம் என்ன என்பதை தெரிந்துக்கொள்ளாமல் ப்ரௌஷ்டபதியிலும் ஆஷாடத்திலும் செய்கிறார்கள். அது ஸரியல்ல- என்று பல பேர் சொல்ல, ஸ்மிருதி முக்தாபல பிரகாரம் புத்திக்குத் தேன்றின வரையில் இதை எழுதலானேன்.

ஸ்மிருதி முக்தாபலம் வர்ணாச்ரமகாண்டம் உபாகர்ம பிரகரணத்தை மநு வசனம் முதல்

यान्तिथिं समनुप्राप्य என்கிற பத்ததி வசனம் வரையில் முதல் பாகமாகவும்,

अर्धरात्रादधस्ताच्चेत्संक्रान्त्यां ग्रहणेऽपिवा ।
उपाकर्म न कर्तव्यं परतश्चेन्न दोषभाक् ॥इति॥
मलमासे निपतिते सूतके मृतकेऽपिवा ।
ग्रहणे संक्रमेवाऽपि मौढ्येऽपि गुरुशुक्रयोः ॥

என்கிற கார்க்யவசனம் முதல்

अधीतवेदविद्यानां कर्तव्यन्तु द्विजन्मनाम् ।
अद्ध्यायाङ्गमिदं नित्यमिति ह्योवाच भार्गवः ।

என்கிற வசனம் வரையில் இரண்டாவது பாகமாகவும்

गुरुभार्गवयोर्मौढ्ये मलमासे च प्रथमोपाकृतिं निषेधति ।

என்கிற அவதாரிகை முதல் மூன்றாவது பாகமாகவும் பிரித்துக் கொள்ளவேண்டும். அதில் முதல் பாகத்தில் மூன்று வேதிகளுக்கும் உபாகர்மாவைச் செய்ய காலத்தையும் காலலக்ஷணத்தையும் சொல்லியிருக்கிறது.

2. இரண்டாவது பாகத்தில் **सूतकेमृतकेऽपिवा । अधीतवेदवि-धानां** என்கிற பதத்தாலும **प्रथमोपकृतिर्नस्यात्** என்று மேலே பிரித்து ப்ரதமோபகர்மாவை மாத்திரம் தனியாகச் சொல்லப்

போகிறதாக பிரதிக்ஞை செய்திருப்பதாலும் இந்த இரண்டா வது பாகமானது प्रथमोपकर्मव्यतिरिक्त த்விதீயாதி உபாகர்மாவை மாத்திரம் சொல்லுகிறது. இந்த இரண்டாவது பாகத்தில் சொல்லியிருக்கிறதானது என்னவென்றால் அர்த்த ராத்திரிக்குள் பட்டு ஸங்கிரமணம் வந்தாலும் அர்த்தராத்திரிக்குள்பட்டு கிரஹ ணம் வந்தாலும், மலமாதமாயிருந்தாலும், ஜநநாசௌசம் வந்தா லும், மரணாசௌசம் வந்தாலும் குரு மௌட்யமாயிருந்தாலும் சுக்கிரன் மௌட்யமாயிருந்தாலும்உபாகர்மாவைச்செய்யக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாவது பாகத்தில் கூறப்பட்ட தோஷங்கள் த்விதீயாதிஉபாகர்மாவைச் செய்கிறபேர் களுக்குத்தான் ஸம்பவிக்குமெனபதில் ஸந்தேகமில்லை. ஏனென் றால் अधीतवेदविद्याना என்பதானது த்விதீயாதி உபாகர்மாவைச் செய்கிற பிரமசாரியையும் கிரகஸ்தர்களையும்தான் குறிப்பிடுகிறது. अधीतवेदविद्यानां सूतकं मृतकं என்ற மூன்றும் பிரதமோபகர்மா வைச் செய்கிற பிரம்மசாரிக்கு ஸம்பவிக்காது. ம்ருதகம் என் பது தாயார் தகப்பனார் மரணத்தில் ஸம்பவித்தாலும், ஸூதகம் அதீதவேதவித்யானும் என்பது ஒருக்காலத்திலும் ஸம்பவிக்காது. இப்படிக்கு த்விதீயாதி உபாகர்மாவுக்கும் இரண்டாவது பாகத் தால் தோஷம் நன்றாய் வெளிப்பட்டது. த்விதீயாதி உபாகர்மா வுக்கு தோஷம் கிடையாது. சிராவண மாதத்திலேயே செய்ய வேண்டும் என்று சொல்லுவதுதான் தெரியாத்தனம் என்பது நன்றாய் வெளிப்படுகிறது. ஆகையால் த்விதீயாதி உபாகர்மா வையும் தோஷமில்லாத சிராவண மாதத்தில் செய்யவேண்டும். அதில் தோஷமிருந்தால் தோஷமில்லாதபிரௌஷ்டபதமாதத்தில், அதிலும் தோஷமிருந்தால் தோஷமில்லாத ஆஷாடமாதத்தில் செய்யவேண்டும். மூன்று மாதத்திலும் தோஷமிருந்தால் சிரா வணபூர்ணிமையிலேயே சாந்தியைச் செய்து த்விதீயாதிஉபகர்மா வையும், பிரதமோபகர்மாவையும் செய்யவேண்டும் என்பதில் சந் தேகமில்லை. இங்கு प्रथमोपाकृतिश्चापि என்கிற வசனத்தில் अपि च என்பதான சப்தத்தால் த்விதீயாதிஉபாகர்மாவுக்கும்சாந்தி செய்ய வேணுமென்று தோன்றுகிறது.

த்விதீயாதி உபாகர்மாவிற்கு தோஷமேயில்லை. சிராவண மாதத்திலேயே செய்யவேணுமென்று சொன்னவர்கள்முன் கூறின பிரகாரம் உபாகர்ம பிரகரணத்தை மூன்றாக விபாகம் செய்து கவனித்தால் ஸரியான அர்த்தத்தை நன்றாய் உட்கொண்டு பிறர் களைத் தூஷிக்கமாட்டார்கள்.

3. அதுபோலவே மூன்றாவது பாகமானது பிரதமோபா கர்மாவை மாத்திரம் சொல்லுகிறது. அந்த பிரதமோபகர்மாவை யும் தோஷமில்லாத காலத்தில் செய்யவேண்டும். மூன்று மாதத் திலும் தோஷமிருந்தால் சிராவணமாதத்திலேயே சாந்திசெய்து செய்யவேண்டும். இப்படிக்கு துவிதீயாதி உபாகர்மாவுக்கும் பிர தமோபகர்மாவுக்கும் நிஷேதம் தெரியவர நிஷேதங்களுக்கு (एकवाक्यम्) செய்ய சாஸ்திரமில்லாததினால் எப்படி नाहिंस्यात्स- र्वभूतानि என்கிற நிஷேதமானது (ஸர்வப்ராணிஹிம்ஸையில்) தோஷத்தை தெரிவிக்கிறதோ அதைக் காட்டிலும் (न ब्राह्मणं हन्यात्) என்கிற நிஷேதமானது எப்படி ப்ராம்மணஹிம்ஸை யில் அதிக தோஷத்தைத் தெரிவிக்கிறதோ அதைக் காட்டிலும் (नात्रेयंहन्यात्) என்கிற நிஷேதமானது எப்படி ஆத்ரேயப்ராம் ணஹிம்ஸையில் அதிக தோஷத்தைத் தெரிவிக்கிறதோ அதுபோ லவே உபாகர்மப்ரகரணத்தில் இரண்டாவது பாகத்திலிருக்கிற நிஷேதமானது நிஷித்தகாலத்தில் செய்கிற துவிதீயாதி உபாகர் மாவுக்கும் தோஷத்தைத் தெரிவிக்கிறது. மூன்றாவது பாகத்தி லிருக்கிற நிஷேதமானது நிஷித்தகாலத்தில் செய்கிற பிரதமோ பகர்மாவுக்கு அதைக் காட்டிலும் அதிக தோஷத்தைத் தெரி விக்கிறது. இம்மாதிரி கீழே சொல்லியிருக்கிற பிரகாரமே சென்ற விக்கிரமஹூ சிராவணமீத்தில் தோஷம் ஸம்பவித்து மன்னார்குடி சாஸ்திரியளவாள் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாயர் அவர்களால் பிரௌஷ்டபத மாதத்திலேயே எல்லா உபாகர்மாக் களையும் செய்யவேண்டுமென்று நிச்சயித்த பிரகாரம் மகாமகோ பாத்தியார் பிரும்மஸ்ரீ திருவிசநல்லூர் சாஸ்திரிகளவர்களாலே யும் அந்த ப்ரகாரமே அங்கீகரிக்கப்பட்டு பிரௌஷ்டபத மாதத் திலேயே எல்லா உபாகர்மாக்களும் நடத்தப்பட்டு இருக்கிறது.

இப்பொழுது இதற்கு மாறுபாடாக சொல்வதானது கிரந்தத்தி லுள்ள அபிப்பிராயத்திற்கும் பெரியோர்களுடைய அபிப்பிராய த்திற்கும் ஒத்துவராதென்பதாகத் தெரிவித்தேன். இப்படிக்கு மூன்று பாகமாக பார்த்தது, உள்ளதான அர்த்தத்தை உட்கொ ள்ளாமல் தோஷமில்லாதகாலத்தில் தாங்கள் செய்யாமலும் பிறர் களையும் செய்யவிட்டாமலும் செய்து தோஷத்திற்கு உள்ளாகி றார்கள். தவிர தோஷமுள்ள காலத்தில் தாங்களும் செய்து பிறரையும் செய்யும்படிச் செய்து பலத்திற்குள்ளாகாமல் மகா தோஷத்திற்கு மாத்திரம் உள்ளானார்களே (अहोकलिविडंबनम) சில பேர்கள் வர்ணாச்ரமகாண்ட வசனங்களுக்கு விரோத மான ஸ்மிருதி வசனங்களைப் பார்த்து தாங்களும் பிரமத்தை அடைந்து பிறர்களுக்கும் பிரமத்தை உண்டாக்கிறார்கள். அவர் கள் சொல்லுகிற வசனங்களும் ஸ்மிருதிகளும் ஸ்மிருதி முக்தா பலத்திற்கு விரோதமாயும் கேழ்வைபடாத கிரந்தங்களாகவுமிரு க்கிறது. ஆகையால் அந்த வசனங்களை நம்பவேண்டாம்.

ஆகையால் தோஷமில்லாத காலத்திலேயே துவிதீயாதி உபாகர்மாவையும் பிரதமோபாகர்மாவைபும் செய்யவேண்டுமென் பதுதான் ஸ்மிருதி முக்தாபலத்தினுடைய கருத்து என்பதை என்னுடைய புத்திக்கு புலப்பட்டவரையில் எழுதலானேன்!

இதிலிருக்கிற பிழையைத் தெரிவிக்க பெரியோர்களை கோரு கிறேன்.

நிகழும் ஆங்கிரஸஹு ஆவணிமீ முதல் தேதியில் ஸங்க்ர மண தோஷமிருப்பதாலும் ஷ ஆவணிமீ 30உயில் அர்த்த ராத் திரிக்குமேல் கிரஹணஸ்பர்சம் ஏற்படுகிறபடியாலும்

अर्धरात्राद्थस्ताच्चेत्संक्रांत्यां ग्रहणेऽपिवा ।
उपाकर्म न कर्तव्यं परतश्चेन्न दोषभाक् ॥इति॥

என்கிறவசனப்படிக்கு வாக்யபஞ்சாங்க ப்ரகாரம் தோஷமில்லாத தினுல்ஷ ஆவணிமீ 30உ தினத்திலேயே த்விதீயாதி உபாகர் மாவையும்ப்ரதமோபாகர்மாவையும் வாக்யபஞ்சாங்கானுஷ்டானி கள் செய்யவேண்டும்.

ஆண்டார்நல்லூர், கல்யாணசுந்தர சாஸ்திரியள்.

கல்வி

மனிதர்களின் முடிவான நோக்கம் துக்க நிவர்த்தி ஸுகப் பிராப்தியாகும், துக்கம் வருவதற்கு எவரும் பிரயத்தினம் செய்வதில்லை. ஆயினும் துக்கம் வருகிறது. இதனுல் மனிதர்களின் கர்மரஹஸ்யம் விளங்குகிறது. கர்மாக்களை யழிக்காவிடின் துக்கம் நீங்காது. கல்வி என்னும் ஆயுதத்தால் கர்மாக்களை அழிக்கலாம். ஸுகமும் துக்கமும், மனிதர்களை சீர்திருத்துவதற்காக வருகின்றன. நன்மை, தீமை, என்பவற்றில் எதனை தீவிரமாக நாம் செய்கின்ருேமோ? அதன்பயனை நாம் அனுபவித்தேதீரவேண்டும். சென்ற ஜென்மத்தில் செய்த கர்மத்தின் பயனை இந்த ஜென்மத்தில் அனுபவித்த முறையாகவே, அடுத்த ஜென்மத்தில் இந்த ஜென்மத்தில் செய்த கர்மபலனை நாம் அனுபவிப்போம். இவ்வித கர்ம நியமத்தை அஸ்திவரமாகக் கொண்டுதான் மானிட சரீரம் உத்பத்தியடைந்திருக்கிறது. தற்காலத்தில் சிலர் புண்யபாப வாதத்தை, அர்த்தமில்லாத வாதமென்று ஒதுக்கி விடுகிருர்கள். அது உசிதமில்லை. அப்படியானுல் மிருகத்திற்கும் நமக்கும் என்ன வித்யாஸம்? துன்பம் வராமலுமிருக்கவேண்டும். அப்படியுமில்லை. உலகத்தில் கல்வி என்பது எதற்கு, முயற்சி எதற்கு கல்வி ஞானத்தால் துன்பம் வராமல் தடுத்துக்கொண்டுவிடலாம். ஆனுல் தற்காலத்திய கல்வி முறையால் ஒருவன் இத்தகைய விவேகத்தை யடையமுடியாது. அது கேவலம், பணத்தில் ஆசையை விருத்தி செய்கின்ற கல்வி. இதனுல் தான், ஜனங்களெல்லோரும் துன்பமுற்று வருந்துகின்றனர். தற்காலம் துக்கமில்லாத மனிதரைக் காணமுடியாது. மிருக பக்ஷிகளின் ஆனந்த ஜீவனமும் மனிதர்களுக்குத் தற்போதில்லை. அரிய மனிதப் பிறவியில் இருக்கும் மனிதர்கள் இப்படி நரகதுக்கம் அனுபவிக்க என்ன காரணம்? விவேகத்தைத் தரக்கூடிய வித்யாப்யாஸமில்லாமையேயாம். தற்போது கீழ்நாட்டினர் மேல்நாட்டினரின் கல்வியே சிரேஷ்டமானது எனக்கருதி, அம்மயக்கத்தால், நம் புராதந பரிசுத்த வித்யாப்யாஸத்தை இழந்து விட்டார்கள். இதன் பயன் இப்போது நாம் துன்பம் அனுபவிப்பதுதான். ஆகையால் உள்ளதை இழந்தது நம்மீதுதவறேயாகும்.

வி. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

தர்சமும் ஸங்கிரமணமும்

குரோதன-வரு தை-மீ 1உயில் ஸம்பவித்த ஸூர்யோபரா கத்தில் உத்தராயணத்துக்கு வேறு, ஸூர்யோபராகத்துக்கு வேறு தர்ப்பணம் செய்யவேண்டுமா? அன்றேல்,

नैकश्राद्धद्वयं कुर्यात् समानेऽहनि कस्य चित् ।

என்கிற வசனப்படி ஒன்றே போதுமா? என்று அறியவேண்டி, அப்பொழுது அடியேன் ஸங்கிரமணவிஷயத்தில் தீக்ஷிதரபிப்பிராய மென்ன? என்கிற நிரூபத்தை எழுதியிருந்தேன்.

சமீபத்தில் அதைக்கண்ணுற்ற ஸ்ரீமான் மயிலே அட்வகேட் ஆர். கிருஷ்ணமாசார்யார் அது விஷயமான விவரங்களை அறிய லாமென்று நமது ஆர்யதர்மத்தை வரவழிக்க ஆரம்பித்ததுமன்றி, எனக்கும் நேரில் பல கடிதங்களை எழுதிவருகிறார்கள். அவைக ளுக்கும் பதில் எழுதிவருவதுடன், நமது பத்திரிகா நேயர்களுக்கும் அறியவேண்டி, மேற்கண்ட தலையங்கத்தின் விஷயமாய் சில அம் சங்கள் சொல்ல வேண்டியதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஓரே தினத்தில் ஒரு தேவதையுடைய இரண்டு சிராத்தங்கள் செய்யக்கூடாது என்று, தக்ஷரும் நைமித்திகமாயின் இரண் டையும் முறையே செய்யும்படி, ஜாபாலி, க்ரது இவர்களும் கூறி இருக்கிறார்கள். காத்யாயனரும், நிமித்தங்களை, ஜாபாலி, கிரது, ரிஷிகளைபோலவே அனுசரிக்கிறார்.

நித்ய, நைமித்திகங்களை அறிந்தபிறகே நைமித்திகங்களைச் செய்யவேண்டும். நிமித்தத்தையுடையதுகள் எல்லாம் நைமித்திக ங்கள் தானே? அமாவாஸ்யையும்நைமித்திகந்தான். ஆனாலும், காலா தர்சவசனத்தில், கண்டோக்தியாய், [இந்த தர்சத்தை நைமித்திக மாயெண்ணி] சிராத்த சேர்க்கையில் தனியாகச் செய்யவேண்டா மென்று தர்சத்தோடு, யுகாதியும், கிரஹணமும், அர்த்தோதயமும் மங்வாதியும், வந்தால் தர்சத்தைச்செய்த பலம் வந்துவிடுவதால் பின்னிட்ட யுகாதிகளைச் செய்யச்சொல்லியிருக்கிறது.

नैकश्राद्धद्वयं कुर्यात् ।

என்கிற வசனத்தால் சரிதார்த்தமாகக் கூடியது மேற்கண்ட தர்ச, யுகாதிகளும், பஞ்சமகாயக்ஞத்தில் பித்ருயக்ஞ பிராம்மண

போஜன நிவிருத்தியும், நித்யஸோதகும்பம் செய்பவர்கள் மாஸிக தினத்தில் ஸோதகும்பம் செய்யாதிருத்தலுமே! மற்றவிடங்களில் இவ்வசனத்துக்குப்பிரவேசமில்லை.

தேவதா பேதமிருந்தால் சொன்னபடி செய்யவேண்டிய தெல்லாம் ஆக்ஷேபகரமில்லாதவைகளே? ஒரே தேவதையாயிருந்தாலும், நிமித்த பேதமிருந்தால் நிமித்தப்படி செய்யவேண்டிய தெனபதில் தான் ஸம்சய முதிக்கிறது. காலாதர்சத்தில் தர்சத்திற்குப்பல சேர்க்கைகளைக் கூறி ஸங்கிரமணச்சேர்க்கையை கூறாமலும் அதற்கு கதி கற்பிக்காமலும் இருப்பதோடு, தீக்ஷிதரவர்களும்

दर्शसंक्रान्तिश्राद्धयोस्सन्निपाते तु द्वयोस्तुल्यबलत्वात् ।

என்று இரண்டையும், ஸமமாகவே பாவித்திருக்கிறார். துல்ய பலமென்று சொல்லியிருப்பதால் இவைகளில் இரண்டையும் அநுஷ்டிப்பதற்கும், பிரபல துர்பலங்களின் சேர்க்கையில் துர்பலத்தை விடுவதற்கும் அபிப்பிராயமாகும்.

नैमित्तिकानि तुल्यत्वात् देवतैक्येऽपि कृत्स्नशः ।

நைமித்திகங்கள் எல்லாவற்றையும் ஒரே தேவதையாயிருந்தாலும் செய்ய வேண்டுமென்கிற காலாதர்ச வசனத்தைக்கூறி பிரகாணத்தை முடித்திருக்கிறார். தீக்ஷிதர் இந்த பிரகரணாரம்பத்தில் பிதிருமேத ஸாரவாக்யத்தையே விஷயவாக்யமாக வியவஹரித்து அந்த கிரந்தத்துக்கு முரணாக ஒன்றுங் கூறாமல், அதையனுசரித்ததுபோலவே முடிவுசெய்திருக்கிறார்.

பிதுருமேதஸாரத்தில் தர்ச சங்கிரமண யோகத்தில் ஸங்கிரமணத்தை செய்யும்படிக்கும் ஸ்மிருதி விலோசனத்தில், நிமித்தங்களைத் தனித்தனியே செய்யவேண்டியது. தர்ச, உபாக, சங்கிரமணச்சேர்க்கையில்போல் என்று முன்னுக்குப் பின் விரோதம் போல் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு சமாதானம் ஒரே காலமாயிருந்தால் முன் கூறியபடியும், பின்னகாலமாயிருந்தால் பின் கூறியபடியும் செய்யவேண்டுமென்றுகிறது.

(தொடரும்)

உமாமகேச்வர சாஸ்திரிகள்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

நளாயினீ

1. த்ருபத ராஜனது பெண் த்ரௌபதி. ஓர் குறியைக்காட்டி அதை அடிப்பவருக்கே அவளைக் கொடுப்பதாக த்ருபதன் சொன்னான். அதை எவருமடிக்க முடியவில்லை. அர்ஜுனன் அடித்தான். ஆதலால் த்ரௌபதியை அவனுடன் அனுப்பி விட்டான். அர்ஜுனன் அம்மா! ஓர் பிக்ஷை கொண்டுவந்தேன்! என்றான். ஆனால் ஐவரும் பங்குபோட்டுக்கொண்டு அநுபவியுங் கள் என்றாள் குந்தி.

2. அது பிக்ஷை அல்ல. பெண் என்று அறிந்து வருந்தினாள். த்ருபதனும் ஐவருக்கு ஒரு பெண்ணைக்கொடுக்க மறுத்தான்; வேத வியாஸர் வந்தார். த்ருபதனுக்கு ஞானக்கண்ணைக் கொடுத் தார். அவள் முற்பிறவியைச் சொன்னார். த்ருபதன் மனைவி தன் பெண்ணுக்கு ஐந்துபதி வேண்டுமென்று புரோஹிதரிடம் வேண்டினாள். இவள் பூர்வ ஜன்மத்தில் நளாயினீ. இவள் பதி மௌத்கல்யர்.

3. இவர் மிக கடுங்கோவக்காரர். கிழவர். குஷ்டரோஹி. எவ்வளவு நன்றாக பணிவிடை செய்தாலும், அது தப்பு! இது தவறு! என்பார். வெய்வார். அடிப்பார். அத்தனையும் அவள் பொருத்துக்கொள்வாள். அவள் முகம் கோணாது. மனம்நோகாது. காலத்தை அறிந்து பணிவிடை செய்வாள். அவர் கைகால் அழுகி நாற்றமெடுக்கும். அவள் அருவருக்கமாட்டாள். அவள் சாப்பிடும் அன்னத்தில் பதியின் அழுகிய விரல்விழுந்து கிடந்தது.

4. அதை எடுத்து அப்புரம் வைத்தாள். அந்த அன்னத்தை அருவருப்பில்லாமல் புஜித்தாள். 'அதைக்கண்டார் முனி. ஆச்ச ரியங்கொண்டார். பெண்ணே! யான் ரோகியல்ல !! கிழவனல்ல ! கோவக்காரனுமல்ல'! உன்னைச்சோதித்தேன்! ஆஹா! என்னபாதி விருத்யம் உனக்கு!! என்றார். மன்மதனைப்போல் அவர்எதிரில் நின் றார். உனக்கு என்னவரம் வேண்டும்? என்றார்.

5. அவள் ஸ்வாமீ இப்படி ஐந்து ரூபமெடுத்து என்னுடன் இரும் என்றாள். அப்படியே இருந்தார். இந்த்ரலோகம்சென்றார்,

னளாயனியுடன் அமிருதங்குடித்தார். பலவருஷம் அவளுடன் ரமித்தார். அவருக்கு இதில் வைராக்யம் வந்தது. அவளைவிட்டு ஸன்யாஸம் செய்துகொண்டார். அவள் மௌத்கல்யர் காலைப் பிடித்துக்கொண்டாள். இன்னும் கொஞ்சநாள் இந்த சுகத்தை அநுபவிக்கலாம் என்றாள்.

6. முனிக்குக் கோபம் வந்தது. நீ இன்னும் இதில் ஆசை வைத்திருக்கிறாய். உனக்கு அடுத்த ஜன்மத்தில் ஐந்து புருஷன் வருவான் என்று சபித்தார். அவள் பரமசிவனைநாடித் தவம் செய்தாள். ஸ்வாமி ப்ரத்யக்ஷமானார். என்னவரம் வேண்டும்? என்றார். புருஷன் வேண்டும் என்று ஐந்துமுறை கேட்டாள். அவரும் உனக்கு மறுபிறப்பில் ஐந்து கணவன் வருவான் என்றார்

7. அவள் அதைக்கேட்டு கண்ணீர்விட்டாள். அது கங்கை ஜலத்தில் விழுந்தது. அது உடனே ஓர் ஸ்வர்ண தாமரையாக மாறிற்று. கங்கை கரையில் யமன் ஓர் யாகம் செய்தான். அதற்கு இந்த்ரன் முதலிய தேவர்கள் வந்திருந்தனர். இந்த்ரன் இந்த ஸ்வர்ணதாமரையைப்பார்த்தான். அதைக் கண்ணீரால் உண்டுபண்ணும் பெண்கண்ணில் பட்டாள்.

8. அவளைப்பார்த்து நீ யார்? ஏன் அழுகிறாய்? என்றான். என்னோடுவந்தால் இது உமக்குத் தெரியும் என்று முன்னே சென்றாள். பின்னே இந்த்ரன் சென்றான். அங்கே ஓர் அழகிய பெண்ணுடன் ஒரு திவ்ய புருஷரைக்கண்டாள். அவ்விருவரும் சொக்கட்டானாடிக் கொண்டிருந்தனர். இவனைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை.

9. இந்த்ரனுக்குக் கோபம் வந்தது, தான் த்ரிலோகாதிபதி என்று கர்வங்கொண்டு பேசினான். ஸ்வாமி இதைப்பார்த்து சிரித்தார். இவன் சக்தியெல்லாம் ஒடுங்கிற்று. மற்றவர்களிடம் இவனை அழைத்துச்செல் என்றார். ஸ்வாமி உத்தரவுபடி இவன் ஓர் குகையில் நுழைந்தான். அங்குதன்னைப்போல் நால்வரிருக்கக் கண்டான்.

10. அவர்களும் கர்வத்தினால் அழிந்த இந்த்ரர் என்று அறிந்தான். அந்த யுவாவும் யுவதியும் பார்வதி பரமேசுவரர் என்று உணர்ந்தான். கர்வத்தினால் தாங்கள் பூமியில் மனிதராகப் பிறக்க வேண்டும்; இப்பெண்ணை ஐவரும் மணக்கவேண்டும் என்று

அறிந்தான். தேவாம்சத்தால் தாங்கள் பிறக்கவேண்டுமென ஸ்வாமியை வேண்டினர்.

11. இவ்வைவரே பாண்டவர். நளாயினியே த்ரௌபதி என்று கூறி வியாஸர் விவாஹம் செய்துவைத்தார். நளாயினியைப் போல் பெண்கள் கற்புள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆனால் விஷயேச்சையை விடவேண்டும். இந்திரர்களைப்போல் கர்வம் கொள்ளக் கூடாது.

ஸ்ரீவத்ஸ, வே ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

புதுமையில் ஓர் புதுமை.— 12உ புதுச்சேரியில் இளைஞர் சங்கத்தில் ஓர் போட்டி உபன்யஸ பரீக்ஷை நடந்தது. தைவ பக்தி என்ற விஷயமே உபன்யஸிக்க எடுத்துக்கொள்ளப்பட்டது. கலியில் ஆங்கிலங்கற்றோரிடைய இதுபுதுமை அல்லவா? சிறியோருக்கு எதைக் கொடுத்தாலும் ஏற்க ஆற்றலுண்டு. இதுபோன்ற விஷயதானம் செய்தோர் ஈசனருளைப் பெருக! ஏனைய சங்கம் இதைக் கவனிக்க! நமது ஸர்வக்ஞ குருமூர்த்திஸ்வாமிகள் ஸதாசாரமுள்ள மாணவனுக்கு ஓர் பதக்கமளிப்பது நினைவுக்கு வருகிறது.

செய்கையும் வேண்டும். 19உ திருவிடமருதூரில் ப்ராமண மஹாஸபை கூடி பல ரஸமான தீர்மானங்கள் செய்தது. தஞ்சை ஜில்லா மற்றவிஷயத்தில்போல் ஸநாதன தர்மத்திலும் முன் நிற்பது என்ன ஆச்சர்யம்? இக்காலத்தில் இதுபோன்ற ஸபை கூட்டுவது பெரிய ஸாஹஸமே. சில ஸபைகள் முன்வருஷம் செய்த தீர்மானங்களரிகார்டிலிருந்தால் அடுத்த வருஷம் ஸபையில்தீர்மானிப்பதற்காக அதைப் பார்ப்பது வழக்கம். தஞ்சை ஸபையாவது அதைவிட்டு செய்த தீர்மானங்களை அனுஷ்டிக்க முயற்சிக்குமென நம்புகிறோம். ஸபை கூட்டியதற்கு அவர்களைப்போற்றுகிறோம்.

கோர்ட்டு தலையிடக் கூடாது. 17உ லண்டன் ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஒருவர் தைவம் ஸ்வர்க்கம் நகரம் முதலிய மதவிஷயங்களில்

சேர்ட்டு தலையிடக்கூடாதென தீர்ப்பு சொன்னார். இறந்த ஜீவர்களோடு பேசுவதாக சில மேனாட்டு ஸபைசொல்லுகின்றன. இது எவ்வளவு தூரமுண்மையோ ஈசனறிவான்! நம் நாட்டு தபோதனர்கள் அங்ஙனம் செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. எப்படியானாலும் சரி. இந்த ஜட்ஜின் தீர்ப்பை மற்ற நீதிபதிகள் கைப்பற்றினால் நலமுண்டு. சாரதாசட்ட வழக்கில் எதிரி வக்கீலுக்கு இது ஓர் அவலம்பம்.

தவஜஸ்தம்பதர்மம். மேமீ 28௳ சிதம்பரம் தாலூகா சாத்தமங்கலத்திலுள்ள ஓர் ஆலயத்தில் ஓர் தாம்ப்ரத்ஜம் ஸ்ரீமதி ராஜம்மாளால் ஆயிரம் ரூபாய் சிலவில் செய்து வைக்கப்பட்டது. இவளது கணவன் இதைச் செய்வதாக ஸங்கல்பம் செய்து அது பூர்த்தியாவதற்குள் இறந்தார். பர்த்தாவின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்தது ஓர் தர்மம். ஆலயத்திற்குச் செய்தது ஓர் தர்மம். ஆதலால் இவள் நற்பிறவி பெறுவாள்.

இக்கலியிலும் ப்ரத்யக்ஷம் 13௳ வத்தல் குண்டில் மழையைக் கருதி உள்ளூர் வால்கேசுவரர் என்ற பகவானுக்கு வெகு தூரத்திலிருந்து ஜலங்கொண்டுவந்து லிங்கத்திற்குமேல் ஒருமுழம் ஜலம் நிற்கும்படி அபிஷேகம் செய்து ஸஹஸ்ரப்ராம்மணபோஜனம் செய்து வைத்தனர். உடனே நல்ல மழை பொழிந்தது. இவ்வளவு ப்ரத்யக்ஷமாக பகவான் தர்மபலனை அளித்தும் நாஸ்திக புத்தி பரவிவருகிறது என்றால் கலியின் மஹிமையேமஹிமை.

நடதால் நல்லதே, 20௳ சைதாபேட்டை ஸத்வித்யாபாடசாலையார் பிள்ளைகளுக்கு வைதிகமாக ஓர் போஜனசாலையும் விடுதியும் ஏற்படுத்த தீர்மானித்திருக்கின்றனர். இது பல வருஷங்களாக வர்ணாசிரம ஸபையில் நிறைவேறும் தீர்மானமே. நமது குழந்தைகளை அவைதிகர்களாகச் செய்ய கலிராஜன் தேடிய பல ஸாதனங்களில் ஹாஸ்டலும் ஒன்று. இளமைப் பருவத்திலேயே ஆஸ்திகத்தை அனுஷ்டான வாயிலாக ஊட்டும் இதை யாரே ஆமோதிக்காதவர்? ஸத்வித்யாசாலையின் முயற்சி கை கூடுக.

தர்மத்வஜாரோஹணம் 20௳ பரமக்குடியில் ஹனுமத்த்வஜாரோஹணம் நடந்தது. ஆயிரக்கணக்கான ஆஸ்திகர் வந்தனர். அமைமண்டலம் ஆஞ்ஜநேயரை அர்ச்சித்து பிறகு பிராமணஸபை நடக்கப்போகிறது. கலியில் ராமநாமாவை உச்சரிக்குமிடத்தில்

ஆஞ்சனேயர் வந்து நிற்பர். ஸ்ரீ ராமாயணத்திற்கு மூலக்ரந்தமான வேதத்தைக் கூறுமிடத்தே பகவான் ப்ரத்யக்ஷமாவார். அவரது அருளால் பிராம்மண்யம் செழித்தோங்குக! உலகம் நன்மை பெறுக.

ஸத்விஷயங்கள்—மாம்பலம் ஸ்ரீகிருஷ்ணகிருபாலயத்தில் சதக்ருது பிரும்மஸ்ரீ லக்ஷ்மீநாராயண சாஸ்திரிகளவர்களால் ப்ரதிதினம் காலை கீதையும், பக்திரஸாயனமும் சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் ப்ரதிதினம் மாலை வாமனபுராணம், சனிக்கிழமை ஸூதஸம்ஹிதை, ஞாயிறு காலைகீதை இரவுகளில்மகாபாரதமும், கும்பகோணம் ஸ்ரீராமஸ்வாமிகோவிலில் பிரும்மஸ்ரீ டி. பி. கல்யாணராமசாஸ்திரிகளால் காலக்ஷேபரூபமாக ஸ்ரீமத்ராமாயணமும் நடைபெறுகிறது

ஸித்திபெருவார்- 22உ மாயவரம் ஜங்ஷன் காவேரிக்கரையில் ஓர் யாதவர் அபரிமிதமாக சிலவு செய்து ஓர் விநாயகர் ஆலயம் கட்டி விதிப்படிக் கும்பாபிஷேகம் செய்து வைத்தார். இந்த யாதவர் ஸித்தமாக இஷ்டஸித்தியைப் பெறுவர்.

தார்மிகர் வாழ்க. 20உ சிதம்பரம்தாலூகா ராயநல்லூரில் ஸ்ரீமான் வைத்யநாத ஸ்வாமி அய்யாவர்கள் 30000 ரூபாய் சிலவிட்டு ஸ்ரீ சுந்தரேச்வரஸ்வாமி கோவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்தார். வேதபாராயணம் அன்னதானம் முதலியன மிகச் சிறப்பாக நடந்தன, சொந்த திரவ்யத்தைக்கொண்டு உத்தம தர்மம் செய்த இப்புண்யவான் பகவத் கடாக்ஷ பாத்ரமாவர்.

ஒயுமா கிளப்புமா? 27உ மன்னார்குடியில் ஓர் வித்வத் ஸபை கூடிற்று. காஞ்சியிலிருந்து ஒரு வாதி வந்து வேதபாஷ்யங்களையும் ப்ராதிசாக்யத்தையும் பற்றி வாதம் செய்தார். பலர், ப்ரதிவாதம் செய்தனர். மத்யஸ்தர் ப்ராதிசாக்ய விஷயத்தில் தோற்றதாக தீர்ப்பு சொன்னார். முதல் விஷயத்தில் வாதி தான் சொன்னது தவறென்று ஒத்துக்கொண்டார். இது பத்திரிகை விஷயம். வாதி தான் ஜயித்ததாகக் கூறக்கூடும். இங்ஙனம் அத்வைத சண்டை ஒன்று கிளம்பி ஒய்ந்தது நினைவிருக்கும். இச்சபையால் சண்டை ஒயுமா அதிகமாகுமா என காத்துப் பார்ப்போம். வித்வத்ஸபை கூட்டியவரை எல்லோரையும் கொண்டாடுகிறோம்.

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவசர்மா.

உ

மேன்மைதங்கிய மைசூர் ஸம்ஸ்தான மன்னரின் ஸ்ரீகைலாஸ பர்வதம் முதலிய

புண்ணிய ஸ்தல யாத்திரை.

இப்பாதகண்டத்தில் பிரசித்திபெற்ற ஐம்பத்தாறு தேசங்களுள் கர்னாடக தேசமொன்றாகும். பூர்வகாலங்களில் இந்நாட்டின் எல்லை பற்பலவிதமாக இருந்தது. இப்போது மைசூர் இராஜ்யமெனப் பெயர்பெற்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த ஒரு ஸம்ஸ்தானமாக இருக்கின்றது. இந்த மைசூர் இராஜ்ஜியத்தின் மேற்கு திசையில் ஸஹ்யாத்ரி (குடகுமலை) என்னும் மலை இருக்கின்றது. இம்மலையிலிருந்து தான் காவிரிநதியும் துங்கபத்திரை சராவதி என்னும் இவ்விரு ஆறுகளும் உற்பத்தியாகின்றன. காவிரி நதியின் உபநதிகளாகிய ஹேமாவதி, லக்ஷ்மண தீர்த்தம், கபிலை இவைகளும் இம்மலையிலேயே உற்பத்தியாகின்றன. இந்த ஸஹ்யாத்ரியே வாலிசுக்ரீவர்களின் முக்கியஸ்தலமாகிய கிஷ்கிந்தை என்று இதிஹாஸம் (புராண சரித்திரம்) கூறுகின்றது. மைசூர் நகரின் தென்திசையில் 100 மைல் தூரத்தில் நீலநகரி (நீலகிரி) மலை இருக்கின்றது. இந்நீலகிரியில் வேனிற்காலங்களில் பல தனிகர்கள் விசேஷமாக வாஸம் செய்கின்றனர். மைசூருக்குத் தென் கிழக்கில் உள்ள மலைத்தொடரில் சாமாராஜநகரம், திம்ப (கணவாயிலுள்ள ஊர்) இவற்றின் மார்க்கமாக ஸத்தியமங்கலம், ஈரோடு இவ்வூர்களுக்குப்போக சரியான மார்க்க வசதி இருக்கின்றது. வடக்கில் பெங்களூர் என்னும் மைசூர் இராஜ்ஜியத்தின் இராஜதானி நகரம் இருக்கின்றது. கிழக்கில் பிளிகிரி ரங்கன் மலையும் தேவாலயமும் இருக்கின்றது. முன் கூறிய ஸஹ்யாத்ரியையொட்டியே சிருங்கேரி க்ஷேத்திரமிருக்கின்றது. மைசூர் நகருக்கு 8-மைல் தூரத்தில் கண்ணம்பாடி என்னும் ஸ்தலத்தில் காவிரி நதிக்குப் பெரியதோர் அணை கட்டப்பட்டிருக்கிறது. இவ்விராஜ்யத்தைச் சேர்ந்த ஸ்ரீரங்கப் பட்டணத்திலும் சிவஸமுத்திரத்திலும் காவிரி நதி இருபிரிவாகப் பிரிந்து மறுபடியும் கூடுகின்றது. சிவஸமுத்திரத்தில் ககனசுக்கி, பரசுக்கி என்ற ஸ்தலங்களில் காவிரிநதியின் நீர் வீழ்ச்சி வெகு உயரத்திலிருந்து விழுகின்றது. இச்சிவ

ஸமுத்திரத்தில் உள்ள நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சார உற்பத்தி செய்யப்பட்டு மின்சார விளக்குகளுக்காக உபயோகிக்கப்படுகின்றது. இங்கு உற்பத்தியாகும் மின்சாரத்தைக்கொண்டு மைசூர் இராஜ்ஜியத்தின் பல முக்கிய ஸ்தலங்களில் மின்சார விளக்குகள் உதவப்படுகின்றன. மைசூர் டவுனிலிருந்து 2மைல் தூரத்தில் சாமுண்டேச்வரி அம்மனின் மலை இருக்கின்றது. இந்த மலையின் மேல் மூன்று தேவஸ்தானங்களும் ஜனங்கள் வஸிக்குமிடங்களும் தேவிகரே என்னும் தடாகமும் இருக்கின்றது. இம்மலையில் தண்ணீரின் சிரமம் அதிகமாக இருந்தது. இம்மலை உச்சியிலிருந்து 2 பர்லாங்கு தூரம் கீழ் இருந்த தேவிகரேயிலிருந்து மலையில் வஸிக்கும் ஜனங்கள் குடி தண்ணீர் எடுத்துப் போய்க்கொண்டிருந்தனர். சிற்சில சமயங்களில் இக்குளத்தில் தண்ணீர் வற்றிப் போகும். அக்காலங்களில் ஜனங்கள் படும் துயரத்தை விவரிப்பது சாத்தியமில்லாததாயிருந்தது. இவ்வாறிருந்த இவ்விடத்தில் இப்போது அரசுபுரிந்துவரும் ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணராஜஉடையார்பஹதூர் மன்னர் அவர்கள் மைசூரிலிருந்து குழாய்களின் மூலம் அம்மலைப் பிரதேசம் பூராவுக்கும் தண்ணீர் வசதியை அமைத்து மின்சார விளக்குகளையும் அமைத்து மலை ஏறும் வழியில் யாத்ரிகர்களுக்கு இரவு காலங்களில் எவ்வித சிரமமும் பயமும் ஏற்படாதபடி செய்திருக்கின்றனர். மேலும் மைசூரிலிருந்து 7 மைல் தூரம் மலையுச்சிக்கு மோடாரில் போவதற்கு மார்க்க சௌகரியமும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இம்மார்க்கத்தின் அழகும் மேல் விசாரணையும் வெகு பரிஷ்காரமாக இருக்கின்றது. மலையின் மேல் லலிதாத்ரி என்னும் அரசரின் அரண்மனையொன்றிருக்கிறது. இம்மலையில் திருப்பதி மலையிலிருப்பதுபோல் மின்சாரவிளக்குகளும் தண்ணீர்க் குழாய்களுமிருப்பதால் யாத்ரிகர்கள் எவ்வித சிரமமுமில்லாமல் ஸ்ரீமஹாராஜா அவர்களைப்புகழ்ந்துகொண்டே சுகமாக ஸ்ரீசாமுண்டேசுவரியை தர்சித்து வந்தார்.

நவராத்திரி மஹோத்ஸவம்.

இம் மைசூர் நகரில் நவராத்திரி மஹோத்ஸவம் லௌகிக வைதிக மரியாதைகளால் மிகச் சிறப்பாய் நடைபெறுவதுபோல் வேறெங்கும் நடைபெறுவதில்லை. இதற்குக் காரணம் யாதெனில் பூர்வகாலத்தில் மிக்கதேகவலிமைகொண்ட மஹிஷாஸுரன்என்ற அஸுரனின் கொடுமையினால் உலகெல்லாம் தத்தளித்துக்கொண்

டிருந்தது. அவ்வமயம் தேவராஜன் வெருண்டு அவ்வஸுரனின் தொந்திரவையகற்ற மும்மூர்த்திகளை வேண்டினன். திரிமூர்த்தி நீண்ட ஆலோசனை புரிந்ததில் ஸம்ஹார கர்த்தான பரமேசுவரனுக்கு இப்பொருப்பு வாய்ந்தது. அப்பொழுது பரமசிவன் தன் உடற்பகுதியாகிய பராசக்திக்கு இவ்வஸுரனைச்சங்கரிக்க ஆசுவின சுக்லப் பிரதமையன்று அனுமதி தந்து தேவர்கோனின் படைகளுடன் ஸ்ரீசாமுண்டேசுவரியை போருக்கனுப்பினர். பிறகு திரிமூர்த்திகள் எதிரியின் தொந்திரவை மாய்ப்பதற்காக மௌன விரதத்துடன் தவமியற்றினர். இவ்வண்ணம் திரிமூர்த்திகளும் தாமாகவே ஊக்கத்துடன் தவமியற்றியதைக் கண்ணுற்ற முனிவர் முதலாயினோரும் இவ்வாறே தவமியற்றினர். அத்தருணம் அஸுரனுக்குத் தெய்வபலம் குன்றி ஒவ்வொரு நாளும் தோல்வியே தோன்றியது. தேவேந்திரன் ஒவ்வொரு நாளும் மாலைப் பொழுதில் போரை நிறுத்தி தன் பரிவாரங்களுடைய யோக க்ஷேமத்தை பஹிரங்கமாய்ச் சபையில் விசாரித்துக்கொண்டு அஸுரனை மாய்ப்பதற்கான தக்க ஏற்பாடுகளையும் படையின் அமைப்பையும் நடத்தி வந்தான். அஸுரன் மாயாவியாகையால் யுத்தம் பலவிதமாய் நடைபெற்று வந்தது. அஸுரனின் வலிமையும் நாளுக்கு நாள் குன்றி தேவியின் வலிமை வளர்ந்து அஸுரனுக்கு பிராணபயம் தோன்றி அஸுரன் இம்மலையுச்சிக்கு விரைந்து சென்றான். ஸ்ரீசாமுண்டேசுவரியும் அஸுரனைப் பின்தொடர்ந்தனள். ஆசுவின சுக்ல அஷ்டமியன்றிரவில் ஸ்ரீ தேவியார் அஸுரனைச் சங்கரித்து உலகிற்கு உதவி புரிந்தனள். மறுநாள் (நவமியன்று) ஸந்தோஷத்துடன் தேவராஜன் ஸ்ரீ தேவியாருக்கும் அவரின் ஆயுதங்களுக்கும் யானை, குதிரை முதலியவற்றிற்கும் மிகச் சிறப்பாய் பூஜை செய்து திரிமூர்த்திகளையும் துதித்தனன். உலகத்திற்கேற்பட்ட க்ஷேமத்தால் உண்டான ஸந்தோஷத்தின் குறியாக திரிமூர்த்திகளின் கட்டளையின்படி தன் எல்லா விருதுபரிவாரங்களுடனும் தசமியன்று விசேஷ வைபவத்துடன் புறப்பட்டு சமீவிருக்ஷ (வன்னி மரம்)த்தினருகிற்சென்றுபூஜைசெய்து பிறகு எல்லோரும் தம்தம் இடம் சேர்ந்தனர். இக்காரணத்தால்பரதநாட்டி(இந்தியாவி)லுள்ளஎல்லா ஆஸ்திகர்களும் ஆசுவின சுக்லப் பிரதமை முதல் தசமி வரையில் பிரஸித்தமான சரன் நவராத்திரியில் கடவுளின் வழிபாடுகளையும் ஆகார நியமத்தையும் உற்சாகத்தையும் கொண்டு தம் தம் ஆயுதங்

களை பக்திசிரத்தையுடன் பூஜை செய்துகொண்டும் ஸ்திரீகள் திரிமூர்த்திஸ்வரூபம் உள்ளடங்கிய தேவேந்திரனின் ஸகல வைபவங்களும் அமைந்த பொம்மைக் கொலுவமைத்துப் பூஜித்துக் கண்காக்ஷிகண்டு களிக்கின்றனர். இம்மஹிஷாஸுரவதம் மைசூரில் நிகழ்ந்தமையால் இச்சமஸ்தான அரசர் இவ்வுற்சவத்தைப்பண்டை காலம்தொட்டே விசேஷமாக வைதிக லௌகிக ரீதிகளில் வெகு விமரிசையாய் நடத்திவருகின்றனர். ஆண்டுதோறும் இவ்வரசர் ஆசுவின சுக்லப் பிரதமையன்று காலையில் தீக்ஷை பெற்று ஸ்துதி பாடகர்களால் புகழப்பெற்று ஸகலப் பிரஜைகளுடனும் சேனை பரிவாரங்களுடனும் சிங்காதனத்தையணுகி சிங்காதனத்திற்கு முறைப்படி பூஜை செய்து வலஞ்சுற்றி வணங்கி ஸ்ரீசாமுண்டேசுவரியை நினைத்து சிங்காதனத்திலமர்ந்து ஒரு முஹூர்த்த காலம் தர்பார் நடத்தி சபையைப் பூர்த்திசெய்தும் பிறகு 2-வது நாள் முதல் இரவில் முன் கூறியவண்ணம் சிங்காதனத்திலமர்ந்து ஸபைகாரியங்களை நடத்திக்கொண்டே வைதிக முறைப்படி ஜபம் பாராயணம் தேவபூஜை முதலியவற்றை நடத்திக்கொண்டும் நவமியன்று ஆயுதபூஜையும் தசமியன்று பிற்பகலில் எல்லா வைபவங்களுடனும் யானையின் மேல் ஜம்பூச்வரி (இன்று அரசர் யானையின் மேலிருந்துபவனிவரும் காக்ஷியை ஜம்பூச்வரி என்று சொல்வது வழக்கம்) நடத்தியும் வருகின்றனர். பிறகு நடக்கும் ஸ்ரீசாமுண்டேசுவரியின் ரதோத்ஸவத்திலும் தெப்ப உற்சவத்திலும் இவ்வரசர் நேரில் சென்று ஜனக்கூட்டத்தில் நின்று பக்தியுடன் அம்மனைத் தொழுகின்றனர்.

சிங்காதனத்தின் பெருமை.

இப்போது மைசூர் மன்னரிடமுள்ள சிங்காதனம் தேவேந்திரனால் அளிக்கப்பட்டதும் இவ்விராஜ வம்சத்தினரால் பக்தியுடன் பூஜிக்கப் பெறுவதுமாகும். இச்சிங்காதனத்தில் இந் நவராத்திரி சமயத்தில் மட்டும் வெகு நியமத்துடன் இவ்வரசர் பிரதினம் ஒரு முகூர்த்த நேரம் அமரும் வழக்கமேயல்லாமல் மற்ற எச்சமயத்திலும் அமர்வதில்லை. மற்ற காலங்களில் இச்சிங்காதனத்தைக் காண்பதரிதாகி பூஜைக்குறியதாகமட்டுமிருக்கின்றது. இப்போதிய அரசரும் பண்டைக் காலவழக்கத்தை மீறாமல் நவராத்திரி காலத்தில் மட்டும் சிங்காதனத்திலமர்கின்றார். ஷ்டி

உத்ஸவாரம்பத்தன்று எல்லா வைதிக மடங்களிலிருந்தும் தேவ ஸ்தானங்களிலிருந்தும் வரும் பிரஸாதங்களை ஏற்று வைதிகரின் ஆசிகளைப் பெறுகின்றார். பிறகு இவ்வுற்சவத்தின் ஒவ்வொருதின த்திலும் ஸபையிலுள்ளோர் அனைவராலும் செய்யப்படும் வந்தன த்தைக் கவனத்துடன் ஏற்று பிரதிவந்தனம் செய்து சபையோர் க்கு புஷ்பதாம்பூலங்களை அளித்து மரியாதை செய்கின்றனர்.

ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பகதூர் அவர்களின் தெய்வபக்தி

இவ்வரசர் தம்பிரஜைகளை தம்மக்களென்றே நினைத்து லௌகிக காரியங்களை நடத்திவரும் ஸாமர்த்தியம் ஸகலஜன பிரஸித்த மாதலின் அதைக் குறித்து விசேஷமாக எழுதவேண்டியதில்லை. இம்மன்னருக்கு ஆஸ்திகதர்மத்தினிடத்தும் தெய்வத்தினிடத்து முள்ள பக்தி விசுவாஸங்களை மட்டும் சிறிது விளக்கப்படுகிறது. இம்மன்னர் குறித்தகாலத்தில் சாஸ்திர முறைப்படி நித்யகன்மங் களைச் செய்துகொண்டும் தேவதாராதனத்தை (கடவுளின் வழி பாட்டை) மௌனத்துடனும் தியானத்துடனும் கவனத்துடனும் செய்துகொண்டும் தான்யம் காய் கறி முதலிய பதார்த்தங்களை உணவுபொருளாக ஏற்று உபவாஸத்திற்கு(பட்டினியிருப்பதற்கு) அஞ்சாமல் தேஹத்தைத்தம் வசப்படுத்திக்கொண்டிருக்கின்றன. ரேயல்லாமல் மனதிற் தோன்றியபடி பிரவர்த்திப்பதில்லை. வைதிக கன்மங்களில் நம்பிக்கை கொண்டு வைதிகமார்க்கத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தர்மாதிகாரிகள் என்னும் வைதிக மந்தி ரிகளையும் ஆஸ்தான வித்வான்களென்ற சிறந்த பண்டிதர்களை யும் எப்போதும் தம்மிடம் வைத்துக்கொண்டு தர்மகாரியங்க ளுக்கு இயன்றவரையில் பாதகமேற்படாமல் கவனித்து வருகி றார். தம்முடையவும் தம்பரிவாரங்களுடையபும் சரீரசுத்திக்காக பல கடினமான தீர்த்தயாத்திரைகளை பக்திசிரத்தையுடன் செய்து அளவற்ற புகழைப் பெறுகின்றார். இவ்வித கடின யாத்திரை அதாவது கேதாரம் பதரி அசாத்யமான கைலாஸபர்வதம் முத லிய இந்த யாத்திரை மிகச் சிரமமானவைகளும் ஸாமான்ய ஜனங் களால் செய்ய இயலாதவைகளுமாகும். ஏனெனில் உலகில் குளி ரைத்தாங்க எவ்வுயிரும் துணியாது. இப்படியிருந்தும் இவ்வரசர் இக்கஷ்டத்தைச் சிறிதும் லக்ஷ்யம் செய்யாமல் இந்த யாத்திரை

நடத்திய விதத்தையும் மட்டும் இங்கு சிறிது விளக்குவாம். இம்மன்னர் 1928-ஷு சிவராத்திரி சமயத்தில் ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் யாத்திரையாகச் சென்றிருந்த சமயம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்களின் கட்டளையின்படி இதை எழுதும் நான் ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவர்கள் இவ்வரசரை உத்தேசித்து அருளிய பிரஸாதத்துடன் ஸ்ரீ காசிக்குச்சென்றேன். அச் சிவராத்திரியன்று காலைமுதல் மாலைவரையில் கெங்காதீரத்தில் ஹனுமான் காட்டில் இம்மன்னர் அசைவற்ற பக்தியுடனும் மௌனத்துடனும் ஈசுவரோபாஸனையை சிரமத்தைப் பாராட்டாமல் செய்துகொண்டிருந்தது உலகமறிந்ததும் போற்றக்கூடியதுமாகும். பிறகு ஸ்ரீ மடத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்த பிரஸாதத்தை இம்மன்னர் ஏற்குங்கால் அளித்த கௌரவமும் பக்தி சிரத்தையும் மெச்சத்தக்கது. இதே மாதிரியாக இவ்வரசர் பதரீகேதாரம் ஹரித்வாரம் முதலியஸ்தல யாத்திரையின் போதும் வைதிக ஸம்பிரதாயத்தைச் சிறிதும் மீறாமல் கடுமை பொருமை இவற்றிற்கிடங்கொடாது தெய்வ ஸேவையையும் பித்ருகன்யங்களையும் க்ஷேத்திர தர்சனம் ஸ்நானம் தர்ப்பணம் தானம் தர்மங்களைச் செய்துகொண்டுதேகச் சிரமத்திற் கஞ்சாமல் நல்வழியைக் கைப்பற்றி வந்தனர்.

‡ கைலாஸபர்வதயாத்திரை.

பக்த சிரோமணியாம் இம்மன்னருக்கு கடவுள் கைலாஸ பர்வத யாத்திரையையும் நிகழ்த்த அருள் புரிந்தமையால் செய்தற்கரிய இந்த யாத்திரையும் கைகூடியது.

---

‡ இந்த விஷயம் மைசூர் மன்னருடன் கைலாஸயாத்திரை போய் இருந்த டாக்டர் ரங்காச்சாரியார் அவர்களுடைய டைரியின்சாராம்சமாகும்.